# I ADDL. DISTRICT & SESSIONS COURT, VELLORE
## DEPOSITIONS OF WITNESSES
## (CHAPTER XXIII CODE OF CRIMINAL PROCEDURE)
## DEPOSITIONS OF WITNESSES P.W.1
## OS.NO.89/2019(C/w.112/2019, 100/2019)

**Name** : Chokkalingam( 89/2019)
**Father/Husband Name** : Veeraraghavan

**Age** : 72

**Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 on the day of 23.01.2026**

இரு தரப்பு வழக்கறிஞர் ஆஜர்.

விசாரணை தொடங்கிய நேரம் : 02.45 p.m

குறுக்கு விசாரணையின் தொடர்ச்சி

என்னிடம் காட்டப்படும் பத்திரத்தில் ஆவணத்தில் உள்ள கையெழுத்து என்னுடையதுதான். அந்த கையெழுத்து **பி.வா.சா.ஆ. 1** ஆகும். இந்த பத்திரமானது 27.04.2018 ல் எழுதப்பட்டது என்றால் சரிதான். இந்த ஆவணம் சார் பதிவாளர் அலுவலகம் வரை சென்றது என்றால் சரிதான். இந்த ஒப்பந்தம் தான் சென்னையில் உள்ள சொத்திற்கு போடப்பட்ட ஒப்பந்தம். ஒரே ஒரு ஒப்பந்தம் இதுதான். இந்த ஒப்பந்தம் சார் பதிவாளர் அலுவலகம் சென்று அசல் பத்திரத்தை பதிவாளர் அலுவலகத்தில் சமர்ப்பிக்க இயலாததால் அதை பதிவு செய்ய இயலவில்லை. ஆனால் எங்களுக்குள் ஏற்பட்டது இந்த ஒப்பந்தம் ஒன்று மட்டும் தான் என்றால் சரிதான்.

இந்த ஆவணத்தின் முன்னிலைக்கு எவ்வளவு பணம் பெற்றுள்ளேன் என்றால் ரூ.27,50,000/– க்கு விற்பனை பேசி இந்த பத்திரம் எழுதிய அன்றே முழு விற்பனையும் தொகையும் கொடுத்துவிட்டேன். அவ்வாறு கொடுத்ததை இந்த பத்திரத்தில்

பி.வா.சா.ஆ. 1 ல் கையெழுத்து உள்ள பத்திரத்தில் குறிப்பிட்டுள்ளேன்.

இந்த பத்திரம் பி.வா.சா.ஆ.1 சென்னை குன்றத்தூரில் வைத்து எழுதப்பட்டது. பணம் குடியாத்தத்தில் கொடுத்துவிட்டோம். எங்கு வைதது பணம் கொடுத்தேன் என்று பத்திரத்தில் எழுதவில்லை. இந்த ஒப்பந்த முன்னிலைக்கு இந்த தேதியில் ரூ.27,50,000 கொடுக்கப்படவில்லை என்றாலும் நான் சொல்வது தவறு என்றாலும் சரியல்ல, நான் முழு தொகையும் கொடுத்துவிட்டேன், அதை பெற்று கொண்டு தான் பிரதிவாதியும் பி.வா.சா.ஆ. 1 ல் கையெழுத்திட்டுள்ளார். பி.வா.சா.ஆ. 1 ல் 3 ஆம் பக்கத்தில் நான் அட்வான்ஸ் தொகையாக ரூ.1,90,000 மட்டும் பெற்று கொண்டதாகவும் மீதி கிரய தொகையான ரூ.25,60,000 த்தை நாளது தேதியிலிருந்து 4 மாதத்தில் கொடுத்துவிடுவதாக எழுதப்பட்டுள்ளதா என்றால் எழுதப்பட்டுள்ளது ஆனால் தவறான தகவல்.

என்னிடம் காட்டப்படும் ஆவணத்தில் பி.வா.சா.ஆ. 1 ல் பக்கம் 3 ல் உள்ள கையெழுத்துக்கள் என்னுடையதுதான். நான் அனைத்தையும் படித்து பார்த்து கொடுத்த பிறகு தான் கையெழுத்திட்டேன் என்றால் சரியல்ல, ஆவண எழுத்தர் மூலமாக தவறுதலாக எழுதப்பட்டதாகும். நான் முழு தொகையும் கொடுத்துவிட்டேன். நான் முழு தொகையையும் கொடுத்திருந்தால் அவ்வாறு அதில் எழுதப்பட்டிருக்கும் என்றாலும் அவ்வாறு முழு தொகையும் கொடுத்திருந்தால் கிரயம் தான் எழுதப்பட்டிருக்குமே தவிர கிரய ஒப்பந்தம் எழுத வேண்டிய அவசியமில்லை என்றால் சரியல்ல, பி.வா.சா.ஆ. 1 ல் பக்கம் 3 ல் உள்ள விவரங்கள் எனக்கு தெரியாது. தவறான தொகை குறிப்பிடப்பட்டுள்ளது. அது பற்றி எனக்கு தெரியாது. என் கையெழுத்து தவறுதலாக பயன்படுத்தப்பட்டுள்ளது.அதிலுள்ள கையெழுத்து என்னுடையதுதான்.

சாட்சி சொல்கிறார் நான் கையெழுதிட்ட பல வெள்ளை தாள்கள் பல பிரதிவாதிகளிடம் இருக்கிறது அதை வைத்து அவர்கள் தயாரித்திருக்கிறார்.

இதில் யார் யார் சாட்சி போட்டிருக்கிறார்கள் என்று தெரியுமா என்றால் தெரியாது, அதை அவரே ரெடி செய்துவிட்டார். அதிலுள்ள கையெழுத்து என்னுடையது, அவர் என் கையெழுத்தை தவறாக பயன்படுத்திவிட்டார்.

இவ்வாறு தயாரிக்கப்பட்டது என்று எனக்கு எப்போது தெரியும் என்றால் தற்போது நீங்கள் காட்டும் போது தான் தெரியும். பி.வா.சா.ஆ. 1 ன் அசல் எங்கு என்றால் அதை பெற்று கொண்டு தான் நான் என் இடத்தை விற்கும் எண்ணம் இல்லை அவர் அசலை பெற்று கொண்டு ரூ.27,50,000 க்கான செக்கை கொடுத்தார். 4 மாதம் கழித்து பதிவு செய்ய முடியவில்லை என்றபோது செக் கொடுத்தார். தேதி நினைவில்லை.

(நான் செக் தேதி பார்க்க என் கையிலுள்ள பேப்பரை எடுத்து பார்த்தேன். ஆனால் அதற்கு முன்பே தேதி தெரியவில்லை என்று சொல்லிவிட்டேன் என்று சாட்சி சொல்கிறார். )

என் அக்ரிமெண்ட்டில் 4 மாதம் காலக்கெடு கொடுத்தது உண்மைதான். இந்த அக்ரிமெண்ட்டிற்கு முன்னிலைக்கு சொத்தை எழுதி கொடுக்கவில்லை என்று நான் வழக்கு எதுவும் போட்டேனா என்றால் பிரதிவாதி வங்கி லோனை கிளியர் செய்துவிட்டு எனக்கு கிரயம் செய்து தருவதாக சொன்னார் அதனால் நான் வழக்கு தாக்கல் செய்யவில்லை.

இன்று வரை நான் வழக்கு தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். ( பிரதிவாதி தரப்பில் இது பண பரிவர்த்தனை வழக்கு என்றும் இந்த கேள்வி வராது என்றும் ஆட்சேபணை தெரிவிக்கப்பட்டது)

என் மனைவி, என் மகன் இருவரும் தனித்தனியாக பிரதிவாதிக்கு பணம் கொடுத்த விவரம் எனக்கு தெரியும். பணம் கொடுத்த அந்தந்த தேதியிலேயே தெரியும். அப்போது நான் உடன் இருந்தேன். அவர்களுக்கு கொடுத்த லோனில் நான் சாட்சி கையெழுத்து போடவில்லை.

நான் கடன் கொடுத்ததாக சொல்லப்படும் பாண்டிலாவது அவர்கள் இருவரும் கையெழுத்து போட்டார்களா என்றால் இல்லை. ஆனால் நான் கடன் கொடுக்கும் போது அவர்கள் இல்லை. அவர்கள் பாண்டுகள் அவரவர் கையில் இருந்தது. அப்போது அதை வாங்கி நான் சாட்சி கையெழுத்து போடுகிறேன் என்று சாட்சி கையெழுத்து போட நான் முற்படவில்லை என்றால் சரிதான்.

நான் பிரதிவாதி பெயரில் பூந்தமல்லியில் ஒரு IP(வறியவர் மனு– Insolvency Petition) வழக்கு சார்பு நீதிமன்றத்தில் IP No.2/2020 என்ற போட்டுள்ளேன் என்றால் சரிதான். என்னிடம் காட்டப்படும் மனு அதுதான். அந்த மனுவின் நகல் **பி.வா.சா.ஆ. 2** ஆகும்.

ஒரு IP தாக்கல் செய்ய வேண்டும் என்றால் எத்தனை பேர் கடன் தாரர்கள் இருக்கிறார்களோ அத்தனை பேரை சேர்க்க வேண்டும் என்றால் (இது Creditor IP என்றும் எனவே இந்த கேள்வி வராது என்று வாதி தரப்பில் ஆட்சேபணை தெரிவிக்கப்பட்டது). நான் கொடுத்த அத்தனையும் கடனையும் பாக்கியையும் இதில் காட்ட வேண்டுமா இல்லையா என்றால் அத்தனை கடனும் காட்டப்படவில்லை.

இதில் பி.வா.சா.ஆ. 1 முன்னிலைக்கு கொடுக்கப்பட்ட ரூ.27,50,000 யை பி.வா.சா.ஆ. 2 ல் காட்டியுள்ளேனா என்றால் காட்டப்படவில்லை, பாண்டு கேசில் உள்ள ரூ.25,00,000 க்கு மட்டும் பி.வா.சா.ஆ. 2 ல் சேர்க்கப்பட்டுள்ளது.

ஒரு நபரின் மீது ஒரு IP தாக்கல் செய்யும்போது அவர் தனக்கு கொடுக்க வேண்டிய அத்தனை கடனையும் தான் காட்ட வேண்டும் என்றாலும் இதிலிருந்து நான் சரியான தகவலை கொடுக்கவில்லை என்று தெரிகிறது என்றாலும் பி.வா.சா.ஆ.1 முன்னிலைக்கு நான் எந்த தொகையும் நான் கொடுக்காததால் தான் பி.வா.சா.ஆ. 2 ல் காட்டவில்லை என்றாலும் தவறான மற்றும் உண்மைக்கு புறம்பான தகவல் ஆகும்.

இந்த IP ல் காசோலை மோசடி கேஸ் பற்றி குறிப்பிட்டுள்ளேனா என்றால் இந்த நீதிமன்றத்தில் நடைபெற்று கொண்டிருக்கும் வழக்கில் உள்ள பாண்டு பற்றி தான் IP தாக்கல் செய்துள்ளேன். இந்த பாண்டு வழக்கில் அந்த சொத்தை முன் ஜப்தி கேட்டு மனு தாக்கல் செய்துள்ளேன் என்றால் போட்டுள்ளேன்.

என்னிடம் காட்டப்படும் ஆவணமானது எனக்கும் பிரதிவாதிக்குமிடையே ஏற்பட்ட செக் வழக்கு இதுவா என்று பாருங்கள் என்றால் ஆமாம். அது **பி.வா.சா.ஆ. 3** ஆகும். அதில் எந்த தேதியில் ரூ.27,50,000 கொடுத்ததாக சொல்லியுள்ளேன் என்றால் 08.10.2018.

அக்ரிமெண்ட் முன்னிலைக்கு 08.10.2018 அன்று தான் பணம் கொடுத்தேன் என்றால் 22.08.2018 அன்று தான் முதல் அக்ரிமெண்ட் குன்றத்தூரில் போடப்பட்டது. 22.08.2018 அன்று தான் பணத்தை கொடுத்தேன்.

நான் அக்ரிமெண்ட் தேதியையே மாற்றி மாற்றி பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. நான் சொன்னது போல் 22.08.2018 அன்று எந்தவித அக்ரிமெண்ட்டும் ஏற்படவில்லை என்றாலும் எந்த பணமும் ஏற்படவில்லை என்றாலும் சரியல்ல, அன்று அசல் பத்திரங்கள் இல்லாததால் பத்திர பதிவு செய்யப்படவில்லை என்றும் மீண்டும் அசல்

பத்திரம் வாங்கிவிட்டேன் என்று மீண்டும் அழைத்து சென்றார் என்றும் அங்கு போன பிறகு அசல் பத்திரம் இல்லை என்றும் தவறான நோக்கத்தின் அடிப்படையில் அவ்வாறு பத்திரத்தை டைப் செய்து என்னிடம் கையெழுத்து பெற்றுள்ளார் என்று சாட்சி சொல்கிறார்.

பி.வா.சா.ஆ. 1 தான் ஒரே ஒரு ஒப்பந்தம் என்று நான் ஏற்கனவே ஒப்பு கொண்ட நிலையில் தற்போது மாற்றி மாற்றி வேறு ஒப்பந்தம் உள்ளதாக கூறுவது உண்மைக்கு புறம்பானது என்றால் சரியல்ல.

இந்த வழக்கில் விற்பனை ஒப்பந்தம் ஏற்பட்ட விவரத்தையோ அதன் முன்னிலைக்கு தாங்கள் செக் பெற்ற விவரத்தையோ அது பணமாகவில்லை என்று அதன் பேரில் குடியாத்தம் நீதிமன்றத்தில் பிரதிவாதி மீது வழக்கு தொடர்ந்த விவரத்தை இந்நீதிமன்ற வழக்கில் குறிப்பிட்டுள்ளேனா என்றால் செக் கேஸ் தனி என்றும் பாண்டு கேஸ் தனி என்றும் அது குற்ற வழக்கு என்றும் இது சிவில் வழக்கு என்றும் அதை சொல்ல வேண்டியதில்லை என்று சாட்சி சொல்கிறார்.

உண்மை சம்பவத்தை மறைத்து வறியவர் வழக்கு போடப்பட்டுள்ளது என்று கேட்கும் கேள்விக்கு ( வாதி தரப்பில் IP வழக்கு சம்மந்தமாக இந்த பண பரிவர்த்தனை வழக்கில் கேள்வி எழுப்பப்பட்டதற்கு ஆட்சேபணை தெரிவிக்கப்பட்டது) தாங்கள் கூறும் அனைத்தும் தவறானது என்றும் ஜோடிக்கப்பட்டது என்றும் சாட்சி சொல்கிறார்.

பிரதிவாதி தங்களிடம் எந்த கடனும் பெறாத பட்சத்தில் எந்த சொத்தையும் விற்கப்படாத பட்சத்தில் அவர் மீது ஒரு தவறான போர்ஜரி பாண்டு தயார் செய்து இவ்வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல,தவறானது என்றும் ஜோடிக்கப்பட்டது என்றும் சாட்சி சொல்கிறார்.

பிரதிவாதிக்கு அறிவிப்பு கொடுத்து அதற்கு அவர் பதில் கொடுத்துள்ளார். அந்த பதிலில் அவர் கடன் பெறவில்லை என்று சொல்லியுள்ளார் என்றால் கடன் பெற்றவர்கள் அனைவரும் அவ்வாறு தான் சொல்கிறார் என்று சாட்சி சொல்கிறார்.

26.09.2019 அன்று என் வழக்கறிஞர் கொடுத்த அறிவிப்பு இதுதான் என்றால் சரிதான். அது **பி.வா.சா.ஆ. 4** ஆகும். அதில் சொல்லியுள்ள சங்கதிகள் அனைத்தும் உண்மை என்றால் சரிதான். 08.10.2018 அன்று தான் கிரய தொகையை வாங்கியதாக பி.வா.சா.ஆ. 4 ல் சொல்லப்பட்டுள்ளது என்றால் சரிதான்.

இதில் போட்டுள்ள சாட்சிகள் அனைவரும் எங்கள் துறையில் வேலை செய்தவர்கள் என்றால் சரிதான். நான் Forest Ranger Officer ஆக இருந்து பணி ஓய்வு பெற்றேன் என்றால் சரிதான். சாட்சிகள் அனைவருமே எனக்கு கீழ் வேலை செய்பவர்கள் என்றால் சரிதான். ஒரு சிலர் என்னுடன் பைனான்சில் பார்ட்னராக இருக்கிறார்கள் என்றால் பைனான்ஸ் கிடையாது பார்ட்னரும் கிடையாது.

எனக்கு பணம் கொடுக்க வசதி கிடையாது என்றால் சரியல்ல. வருமான வரி கணக்கில் சொல்லப்பட்டுள்ளதாக நான்சொல்வது வரி வருமான கணக்கை கொண்டு வந்து தாக்கல் செய்தால் தான் தெரியும் என்றால் சரியல்ல. எனக்கு வருமானமே ரூ.1,40,000 என்று குறிப்பிட்டுவிட்டு இவ்வளவு பணம் கொடுக்க எனக்கு வாய்ப்பில்லை என்றால் சரியல்ல.

நான் செக் கேசிற்கு அனுப்பப்பட்ட அறிவிப்பு பதில் அறிவிப்பு இதுதான் என்றால் சரிதான்(வாதி தரப்பில் இது இந்த வழக்கிற்கு சம்மந்தமில்லை என்று ஆட்சேபணை தெரிவிக்கப்பட்டது) அந்த

ஆவணம் **பி.வா.சா.ஆ. 5** ஆகும்.

இந்த அறிவிப்பிலும் கூட என்னிடம் ரூ.25,00,000 வாங்கவில்லை என்றும் எந்த அக்ரிமெண்ட்டும் ஏற்படவில்லை என்றும் ரூ.25,00,000 வாங்கியது பொய் என்று பதில் கொடுத்துள்ளார் என்றால் இவை அனைத்தும் ஜோடிக்கப்பட்டு எதிரியால் அனுப்பப்பட்ட அறிவிப்பு அனைத்தும் தவறான தகவல் ஆகும்.

என் மகன் சாட்சியம் அளிக்கும்போது அவர் கொடுத்த கடன் தேதிகளில் நான் உடனில்லை என்று சாட்சி அளித்துள்ளார் என்றாலும் ஆனால் நான் உடனிருந்ததாக சொல்வது உண்மைக்கு புறம்பானவை என்றால் சரியல்ல, நான் உடனிருந்தது உண்மை. ( இவ்வாறான கேள்வி கேட்க வாதி தரப்பில் கடுமையான ஆட்சேபணை தெரிவிக்கப்பட்டது). மேலே இது குறித்து சாட்சி பதிலளித்துள்ளதால் இந்த கேள்வி இங்கு பதிவு செய்யப்படுகிறது.

தன்னிடம் எந்த கடனும் வாங்காதபட்சத்தில் நானே அனைத்து ஆவணங்களையும் தயார் செய்து அவருக்கு அவபெயர் ஏற்படுத்த வேண்டும் என்ற கெட்ட எண்ணத்தில் இவ்வாறான வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல.

அவர் வாங்காத எழுதி கொடுக்காத புரோநோட்டிற்கு எந்த கடனும் திருப்பி செலுத்த வேண்டியதில்லை என்றாலும் இந்த தாவா தவறானது என்றாலும் தாவா தள்ளுபடி செய்யத்தக்கது என்றாலும் சரியல்ல. பொய்யான சாட்சிகளை வைத்து வழக்கிற்காக தயார் செய்யப்பட்ட போர்ஜரி பாண்டு என்றாலும் அதனால் எந்த பரிகாரமும் தாங்கள் கோர முகாந்திரம் இல்லை என்றாலும் சரியல்ல. இந்த வழக்கிற்கு எந்த வியாஜியமூலமும் ஏற்படவில்லை என்றால் சரியல்ல.

குறுக்கு விசாரணை தொடர்ச்சிக்காக வழக்கு ஒத்தி வைக்கப்படுகிறது.

விசாரணை முடிந்த நேரம்: 03.55 p.m

சாட்சி திறந்த நீதிமன்றத்தில் சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு என்னால் சரிபார்க்கப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பித்து சரி என்று ஒப்புக் கொண்டு கையெழுத்திட்டார்.

G SANTHI

Digitally signed by G SANTHI
Date: 2026.01.23 18:46:03 -0100

முதலாவது கூடுதல் அமர்வு நீதிபதி,
வேலூர்.